செ.கு.எண்: 603 24.09.2007

<u>செய்தி வெளியீடு</u>

22.8.2006 அன்று சமூக நலத் துறையின் மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை செய்தார்கள்.

"இந்தியாவில் முதன் முறையாக சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் செவித் திறன் குறைந்தோர் பயன்பெறும் வகையில் பி.காம்., மற்றும் பி.சி.ஏ., பட்டப் படிப்பு தொடங்க ஆவன செய்யப்படும்."

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, செவித் திறன் குறையுடையோர் பயன்பெறும் வகையில், சென்னை மாநிலக் கல்லூரியில் 2007–2008ஆம் கல்வி ஆண்டு முதல் பி.காம். (பொது) மற்றும் பி.சி.ஏ (கணினி பயன்பாடு) ஆகிய பட்டப் படிப்பு வகுப்புகளை மாலை நேர பகுதியில் தொடங்க அனுமதித்து அரசு ஆணை 31–1–2007 அன்று வெளியிடப்பட்டது.

28.8.2007 அன்று உயர் கல்வித் துறை இந்த திட்டத்தினை செயல்படுத்த 5 விரிவுரையாளர்களை தற்காலிகமாக நியமிக்க உத்தரவு வழங்கியுள்ளது. பி.காம். பட்டப் படிப்பிற்கு 14 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். பி.சி.ஏ. (கணினி பயன்பாடு) வகுப்பிற்கு 14 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

இந்தியாவில், முதன் முறையாக சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியில் செவித் திறன் குறைந்தோர் பயன்பெறும் வகையில் பி.காம். மற்றும் பி.சி.ஏ. பட்டப் படிப்பு தொடங்கப்படுகிறது.

இந்த கல்வி ஆண்டில் 28 செவித்திறன் குறையுடைய மாணவ, மாணவிகள் பி.காம்., மற்றும் பி.சி.ஏ., பட்டப்படிப்பில் சேர தேர்வு செய்யப்பட்டுள்ளனர். முதலாண்டு சேர்க்கைக்கு தேர்வு செய்யப்பட்ட 28 மாணவ, மாணவிகளுக்கு கல்லூரி அனுமதி அட்டை மாண்புமிகு சமூகநல அமைச்சர் அவர்களால் இன்று வழங்கப்பட்டது.

செவித்திறன் குறையுடைய கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக காதொலிக் கருவியும், சூரிய ஒளியினால் செரியூட்டக்கூடிய பேட்டரிகளும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் அரசு செயலாளர், திரு. நா.ச. பழனியப்பன், ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் திரு. வி.கு. ஜெயக்கொடி, மற்றும் மாநிலக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.